# சிவவாக்கியரின் சூட்சும சக்கரங்கள்

2

**முனைவர்.மு.கவிதா**
**உதவிப்பேராசிரியர்**
**தமிழ்த்துறை**
**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்**
**கோவை -641043**
Mail ID -kavithasampath.m@gmail.com ORCiD: 0000-0003-0484-9311

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியங்களைக் கொண்டு அவ்விலக்கியங்கள் தோன்றிய காலம், அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் மற்றும் அவ்விலக்கியம் தோன்றப் பெற்றதற்கான தேவையையும் அறியமுடிகின்றது. அவ்வாறே தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர் இலக்கியங்களுக்கும் பெரும் பங்குள்ளதை மறுப்பதற்கில்லை. மனித உடல் எண்ணற்ற இரகசியங்களைக் கொண்டது. இவ்வுடலில் உறையும் ஆற்றல்கள் அளப்பறியன. இவ்வாற்றல்களைச் சரியான வழிகாட்டலுடன் கண்டறியும்போது, மனிதன் உடலுக்குள்ளாகவே உயரிய சக்தியாகிய இறை சக்தியைக் கண்டடைகின்றான். இச்சக்தியை பெற்றுக் கொள்ள அவனுக்குக் கருவியாக அமைவது அவனது உடலே. எனவேதான் தன்னுள் இறையை உணர்ந்த சித்தர்கள் தம் பாடல்களில் உடலின் இன்றியமையாமையை எடுத்தோதியுள்ளனர். மனித உடலில் மிகப்பெரிய ஆற்றலாகிய குண்டலினி எனும் பேராற்றல் உள்ளதாகக் கண்டு கொண்ட சித்தர்கள் அதனைத் தன் உடலில் எழுப்பும் கலையினையே யோகம் என்றனர். இவ்வாற்றலினைத் தொழிற்படுத்த உதவுபவை உடலின்கண் அமைந்துள்ள சூட்சும சக்கரங்கள். இவையே ஆதாரங்கள் எனப்படுகின்றன. இவ்வாதாரங்களைச் சரியான குருவின் வழிகாட்டலின்படி சரியாகப் பயன்படுத்திக் குண்டலினி எனும் உயர் ஆற்றலை எழுப்பும் சாதகன் தன் தலையின் உச்சியில் உள்ள அமிர்தத்தைக் குடிக்கிறான் என்கிறது சித்தரியம். இவ்வாறு மனித உடலில் உறைந்து கிடக்கும் உயர் ஆற்றலை வெளிக் கொணரும் ஆதாரங்களையும் அவற்றின் வழி உருவாக்கப்படும் அமிர்தத்தையும் அடையும் வழியினைச் சிவவாக்கியர் எவ்வாறு போதிக்கிறார் என்பதனை சிவ வாக்கியரின் சூட்சம சங்கள் எனும் பொருண்மையில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

மூலாதாரம் - சுவாதிட்டானம் - மணிபூரகம் - அநாகதம் - விசுத்தம் - ஆக்நேயம்

**முன்னுரை**

சித்து' என்ற சொல்லுக்கு அறிவு என்பது பொருள். எனவே சித்தர் என்பது அறிவுடையோர் என்று பொருள்படும். சித்து என்பதற்குச் சித்தி என்றும் பொருள் உண்டு. சித்திகள் எட்டு. அவை வருமாறு:1.அணுமா- ஆன்மாவைப் போல் ஆதல், 2.மகிமா- மகத்துவம் ஆதல்,3.கரிம தன் உடல் கண்டிப்பு இல்லதாய்க் கண்டிப்பு உள்ளவற்றை உருவ வல்லன் ஆதல், 4. இலகுமா- இலகுத்தமாதல், 5.பிராத்தி- வேண்டுவன அடைதல், 6. பிரகாமியம்- நிறையுளன் ஆதல்,7. ஈசத்துவம்-ஆட்சியுளன் ஆதல், 8.வசித்துவம் - எல்லாம் தன்வசமாக்க வல்லனாதல். இவ்வெண் சித்திகளும் கைகூடப்பெற்றோர் சித்தர் எனப்படுவர் என்றும் கூறுவதுண்டு. சித்து என்பதற்கு இரசவாதம் என்று வேறொரு பொருளும் உண்டு. இக்கட்டுரையானது சித்தர்களில் ஒருவரான சிவ வாக்கியரின் சூட்சம சக்கரங்கள் குறித்து ஆராய்கின்றது.

**சிவவாக்கியர்**

பதினெண் சித்தர்களில் தலைசிறந்த ஒருவராக விளங்கியவர் சிவவாக்கியர், மனம், வாக்கு, செயல் என்ற மூன்றிலும் இறைசிந்தனை உடையவராய்த் திகழ்ந்தவர். அவர்தம் பாடல்கள் நமக்குப் பல நல்லனவற்றைப் போதிக்கினறன. சித்தமெல்லாம் எனக்குச் சிவமயமே என்று வாழ்ந்தாலும் பிறதெய்வ நிந்தனை என்பது ஒருசிறிதுமின்றி மக்களை நெறிப்படுத்தும் பாடல்களைத் தந்தவர். உண்மையான வழிபாடு என்ன என்பதைத் தெளிவாக நமக்குப் போதித்தவர். இறையை, இறைமையுணர்வை எடுத்தோதிய அதே வேளையில், தேவையற்ற சடங்குகளில் மூழ்கி உண்மையான வழிபாட்டினை மறந்த மக்களை இவர் சாடிடவும் தயங்கவில்லை.

**"நட்ட கல்லைச் சுற்றிவந்து நாலுபுட்பம் சாற்றியே**
**சுற்றிவந்து முணுமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா**
**நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில் சுட்டசட்டி**
**சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"**

**(சிவ.வா.பா.482)**

என்ற இந்தப் பாடல்வழியாக இறையுணர்வு ஓர் உள்ளுணர்வாகப் பொலிய வேண்டும். அது போலித்தனமான சடங்கு, சம்பிரதாயங்களில் காணாமல் போய்விடக்கூடாது என்ற தன்னுடைய எண்ணத்தை மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறார். பொய்கையாழ்வார் இதே கருத்தினைத் தன்னுடைய பாடல் ஒன்றில் தெரிவிக்கிறார்.

**"உளன் கண்டாய் நன்னெஞ்சே உத்தமனென்றும்**

**உளன் கண்டாய் உள்ளுவா றுள்ளத்து உளன்கண்டாய்**

**வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்**
**உள்ளத்தில் உள்ளான் என்று ஓர்**

**முதல் திருவந்தாதி. 99**

இறைவன் நம் உள்ளங்களிலே அந்தர்யாமியாக வாழ்கிறான் என்ற உண்மையை மறந்தவர்கள்தான் புறவொழுக்கங்களிலே ஈடுபடுகின்றனர். என்பது அறிஞர் பெருமக்கள் கருத்தாக அமைகின்றது. இதனையே மிக எளிமையாக, “உள்ளத்தில் உள்ளானடி அதை உணரவேண்டுமடி உள்ளத்தில் காண்பாய் எனில் கோயில் உள்ளேயும் காண்பாயடி" என்கிறார் கவிமணி.

**ஆறு ஆதாரங்கள்**

மனித உடலின்கண் மறைந்திருக்கும் சூக்கும ஆற்றல் மையங்களாக விளங்குபவையே ஆதாரங்கள் எனப்படும். அவை 1. மூலாதாரம். 2. சுவாதிட்டானம், 3. மணிபூரகம், 4. அநாகதம், 5. விசுத்தம், 6. ஆக்நேயம் என்பவைகளாகும். இவை முறையே மூலம், கொப்பூழ், மேல்வயிறு,நெஞ்சம்மிடறு, புருவநடுப்பகுதி ஆகியவற்றில் அமைந்திருப்பதாக சித்தர் நூல்கள் விவரிக்கின்றன. இடகலை எனப்படும் இடப்பக்க சுவாசத்;மை;, பிங்கலை எனப்படும் வலப்பக்க சுவாசத்தையும் சீராக்கி அதனை சுழிமுனை எனப்படும் முதுகுத் தண்டின் வழியே செலுத்தும் போது மூலாதாரத்தில் சுருண்டு கிடப்பதாகச் சொல்லப்படும் குண்டலினி சக்தி, ஒவ்வொரு ஆதாரங்களாக ஆதாரம் ஆறினையும் கடந்து சகஸ்ராரம் எனப்படும் கபால உச்சியை அடைந்து அங்கே அமுதத்தைச் சுரக்கச் செய்கிறது. இந்நிலையை அடைந்த சாதகள் மரணமில்லாப் பெருவாழ்வைத் தனதாக்கிக் கொள்கின்றான் என்கின்றனர். சித்தர்கள். ஆதாரங்கள் ஆறினோடு, சகஸ்ராரம் எனப்படும் ஒன்றினையும் சேர்த்துச் சக்கரங்கள் ஏழு என அழைக்கும் மரபும் உண்டு. இவற்றைச் சித்தர் நூல்கள் வெட்டப்படாத சக்கரங்கள் என்கின்றன. இச்சக்கரங்கள் தாமரை வடிவம் உடையனவாக சித்தர் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. இதனைச் சிவவாக்கியர் அரும்பிலாத பூ (174), மூலவாசல், நல்ல வாசல், ஞானவாசல் ஆறு வித்து (91), ஆறுபங்கயம் (225) ஆறு மாநிலம் (363), பண்டை ஆறு (65) என்றெல்லாம் தன்பாடல்களில் குறிப்பிடுகின்றார். இவை ஏன் தாமரைகள் என அழைக்கப்படுகின்றன என்றால், "இந்தச் சக்கரங்களின் வழியாகத்தான் யோக சக்தியாகிய குண்டலினி பாய்ந்து, வாழ்விலும், தேகத்திலும், உணர்விலும் ஆத்மானுபவத்தை உண்டாக்குகின்றது. நிலையாக மலர்ந்து சக்தி வெள்ளமாக அமைவதால் சக்கரங்கள் தாமரைகள் எனப்படுகின்றன" இத்தாமரைகளாகிய சக்கரங்களைக் கடந்து சென்றால் சகஸ்ராரத்தில் இறைவனைக் காணலாம். இதனைச் சிவவாக்கியரின் பாடல் "புண்டரீ மற்றுளே

புணருகின்ற புண்ணியர்" (பாடல்.60) என்கிறது.

**ஆறு ஆதாரங்களின் எண்ணும், அவற்றுக்கான எழுத்தும்**

தாமரைகளாகக் கருதப்படும் இவ்வாதாரங்கள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட எண்ணிக்கைக் கொண்ட இதழ்களைக் கொண்டவை. இந்த எண்ணிக்கை என்பது அந்தந்த சக்கரத்தில் நிகழும் ஆன்ம உணர்வு அதிர்வுகளைப் பொறுத்தது என்பர் அறிஞர். இவ்விதழ்களின் எண்ணிக்கையைச் சிவவாக்கியரின்,

**"நாலொடாறு பத்து மேல் நாலுமூன்றும் இட்டபின்**
**மேலுபத்து மாறுடனூ மேதிரண்ட தொன்றுமே**
**கோலிஅஞ் செழுத்துடே குருவிருந்து கூறிடில்**
**தோலுமேனி நாதமாய்த் தோற்றி நின்ற கோசமே" -**
**- சிவ.பா.169**

என்ற இப்பாடல் இதழ்களின் எண்ணிக்கையை உரைக்கிறது. இதன்படி மூலாதாரம் - நான்கு இதழ்களையும், சுவாதிட்டானம் - ஆறு இதழ்களையும், மணிபூரகம் - பத்து இதழ்களையும், அனாகதம் - பன்னிரண்டு இதழ்களையும், ஆக்நேயம் - இரண்டு இதழ்களையும் கொண்டதாக சுட்டப்படுகின்றது. இவை தவிர இவ்வாதாரங்கள் ஒவ்வொன்றும் ஒரு மூலமந்திரத்தைக் கொண்டுள்ளன. இவை பீஜமந்திரங்கள் உடலில் எனப்படுகின்றன. இம்மந்திரங்கள் போண்டமாக விளங்கும் மனித உடலில் மிக அடிப்படையான ஒலி அமைப்புகள் ஆகும். இப்பபீஜ மந்திங்களை,

**"நவ்வுமவ்வை யும்கடந்து நாடொணாத சியின்மேல**
**வவ்வுயவ்வு ளும்சிறந்த வண்மைஞான போதகம்**
**ஒவ்வுசுத்தி யுள் நிறைந்து உச்சியூடுருவியே**
**இவ்வகை அறிந்த பேர்கள் ஈசன் ஆணை ஈசனே"**
**(சிவ.பா. 158)**

என்ற இப்பாடல் குறிக்கின்றது. இதன்வழி மூலாதாரம் - ஓம் சுவாதிட்டானம் ந, மணிபூரகம் -ம, அனாகதம் - சி, விசுத்தி - வ, ஆக்நேயம் - ய, என்ற மூல ஒலிகளைக் கொண்டுள்ளன. "தாமரை இதழ் போன்ற இந்தச் சக்கர இதழில் உள்ள எழுத்துக்கள் வெறும் வரிவடிவ எழுத்துக்களைக் குறிப்பதாகக் கருதக் கூடாது. அவை ஒலி அதிர்வுகளையும் சக்கரங்களில் வேறுபட்ட அளவில் இயங்கும் சக்திகளின் இயல்புகளையும் குறிக்கின்றன. சக்கர இதழ்களில் உள்ள எழுத்து, ஒன்று அல்லது பலவான ஆன்மார்த்த ஒலிகளைக் குறிக்கவும் சுருக்கி வெளிப்படுத்தவும் செய்கின்றது.

இந்த ஒலிகளின் கூட்டுத் தொகையே அந்தச் சக்கரத்தின் மந்திரம்"ஆகும்.

**ஆறு ஆதாரத் தெய்வங்களும் அவற்றின் பூதங்களும்**

இந்த ஆறு ஆதாரங்களுக்குமென தனித்தனியான தெய்வங்களும், தனித்தனி பூதங்களும் உள்ளன. இத்தெய்வங்கள் எந்த சமயக் கடவுளையும் குறிப்பவை அல்ல, இவை ஆதாரங்களின் ஆன்மீகச் சக்திகளையே உணர்த்துகின்றன. அவையாவன :-மூலாதாரம் -கணபதி - டாகினி, சுவாதிட்டானம் - பிரம்மா சரஸ்வதி, மணிபூரகம் - விஷ்ணு - இலக்குமி. அநாகதம் - ருத்திரன் - பார்வதி, விசுத்தம் - மகேஸ்வரன் - மகேஸ்வரி, ஆக்நேயம் - சதாசிவன் - மனோன்மணி. இதனைச் சிவவாக்கியர் பாடல்,

**"ஒடுக்குகின்ற சோதியும் உந்தி நின்ற ஒருவனும்**
**நடுத்தலத்தில் ஒருவனும் நடந்து காலில் ஏறியே**
**விடுத்து நின்ற இருவரோடு மெய்யினோடு பொய்யுமாய்**
**அடுத்து நின்று அறிமினோ அனாதி நின்ற ஆதியே"**
**(சிவ.வா.பா. 312)**

உந்திக் கமலமான மணிபூரகத்தில் நின்று விஷ்ணுவையும், நடுவாகிய உடம்பில் சுவாதிட்டானத்தில் உள்ள பிரமனையும் அறிந்து வாசிக்காலால் எத்தி வணங்கி இரண்டையும் விட்டு மேல் ஏறி அனாகதத்தில் ருத்திரனையும், விசுத்தியில் மகேசுவரனையும், ஆக்நேயத்தில் சதாசிவனையும் அறிந்து வாசியை மேலேற்றி தியானத்தில் நின்று அனாதியான ஆதியை உணரச் சொல்கிறது இப்பாடல். இவை தவிர, இவ்வாதாரங்களுக்கென சில தன்மைகளும், வண்ணங்களும் செயல்பாடுகளும் உண்டு. ஆதாரங்களில் மூலாதாரம் - மண், சுவாதிட்டானம் - நீர், மணிபூரகம் - நெருப்பு, அநாகதம் காற்று, விசுத்தம் - ஆகாயம், ஆக்நேயம் இவ்வாதாரங்களின் தன்மையை, மனம் எனப்படுகின்றது.

**"ஆதார மூலத் தடியில் கணபதி**
**வேதாந்த பூமி விஷ்ணு நீரினில்**
**ஏதாள ருந்திர னீசனார் காற்றுவின்**
**மீதே சதசிவ மெய்க்கு மப்பதமே"**

அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்திலும் உள்ளது என்பதே சித்தர் சித்தாந்தம். அதன் அடிப்படையில்தான் சித்தர்கள் ஒவ்வொரு ஆதாரத்திற்கும் ஒவ்வொரு பூதத்தையும் அவற்றோடு தொடர்புடைய தெய்வங்களையும் குறித்துள்ளனர். சித்தர்கள் அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்தில் உள்ளது எனக் கண்டனர். எனவேதான் ஒவ்வொரு மனிதனும் ஓர் அண்டமே

என்பதை உணர்த்த யோகத்தைத் தம்பாடல்களில் பாடிச்சென்றனர். சித்தர்கள் பேசும் ஆதாரங்களும் அவற்றின் பஞ்சபூதங்களும் அறிவியல் அடிப்படையில் அமைந்திருப்பது பெரும் வியப்புக்குரியது. ஔவைக் குறள்; பஞ்சபூதங்களால் அமைந்த உடலில் பூதங்களின் சதவீதத்தை உணர்த்துகிறது."நிலமைந்து நீர் நான்கு நீடங்கி மூன்றே உலகையிரண் டொன்று விண்". நமது உடம்பில் நிலம் ஐந்து பாகம், நீர் நான்கு பாகம், தீ மூன்று பாகம், காற்று இரண்டு பாகம், ஆகாயம் ஒரு பாகமாய் அமைந்துள்ளது. பஞ்சபூதத் தன்மையுடைய இவ்வுடலை யோகத்தால் நிலைநிறுத்தி அடையும் பெருவாழ்வைச் சிவவாக்கியரின் ஒடுங்குகின்ற சோதியும் உந்தி நின்ற ஒருவனும் (312), காலிரண்டு மூலநாடி கண்டதங்கு உருத்திரன் எனும் பாடலும் இக்கருத்தையே உணர்த்துகிறது.

**"நெருப்புவாயு நீருமண்ணும் நீள்விசும்பு மாகுவான்**
**கருப்புகுந்து காலமே கலந்த சோதி நாதனைக்**
**குருப்புனலில் மூழ்கினார் குறித்துணர்ந்து கொள்வரே" (சிவ.பா.432)**

இவ்வுடம்பு பஞ்சபூதங்களால் ஆனது. இவ்வுடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களின் வழி குருவின் ஆணையை ஏற்றுப் பயணிப்பவர் பெறு வாழ்வு பெறுவர் என்பதே இப்பாடலின் கருத்து.

**ஆதாரங்களும் அதன் நிறமும்**

இவ்வாதாரங்கள் ஒவ்வொன்றும் தனக்கென தனித்தனி நிறங்களைக் கொண்டுள்ளதாக சித்தரியம் பேசுகிறது.

**"பிருதிவி பொன்னிறமே பேதமை அல்லவடி**
**உருவது நீரடியோ உள்ளது வெள்ளையடி**
**தேயு செம்மையடி திடனது கண்டாயே**
**வாயு நீலமடி வான்பொருள் சொல்வேனே**
**வானமஞ் சலடியோ வந்தது நீகோளாய்"**
**(அகப்பேய்.பா.11-13)**

என பூதங்களின் நிறத்தை அகப்பேய் சித்தர் பாடல் குறிக்கிறது. இதில் மூலாதாரம் மண் தன்மையுடையது. அது பொன் நிறம், சுவாதிட்டானம் நீர் தன்மையுடையது. இது வெள்ளை. மணிபூரகம் தீயின் தன்மையுடையது. அதன் நிறம் செம்மை, அநாகதம் வாயுத் தன்மையுடையது. அதன்நிறம் கருமை. விசுத்தம் வான் தன்மையுடையது. அதன்நிறம் நீலம். ஆக்நேயம் மனம் இது வெண்மைநிறம். இவ்வண்ணங்கள் கொண்ட ஆதாரங்கள் வழி பன்னிரண்டு அங்குலம் சூரிய கலையில் இருந்து, வெளியேறும் காற்றைக் கும்பகம் செய்து நிறுத்தித் தீயே உடலில் சோதியாக உள்ளது என்பதை உணர்ந்து, உணர்வை ஏற்றி தியானித்து வாசியோகம் செய்து பரம்பொருளை

ஆய்ந்தவர் பரப்பிரம்மமாக மாறுவர் இதனை

**"பன்னிரண்டு கால் நிறுத்திப் பஞ்ச வண்ணமுற்றிடின்**
**மின்னியே வெளிக்குள் நின்று வேறிடத்து அமர்ந்ததும்**
**சென்னியாம் தலத்திலே சீவன் நின்று இயங்கிடும்**
**பன்னி உன்னி ஆய்ந்தவர் பரப்பிரம மானதே"**
**(சிவ..பா.382)**

என்கிறார் சிவவாக்கியர்.

**சகஸ்ராரம் சக்கரம்**

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி. ஆக்நேயம் ஆகிய ஆறு ஆதாரங்களைத் தாண்டி விளங்கும் சக்கரம் சகஸ்ராரம். ஆக்நேயத்திற்கு மேல் எட்டு விரற்கட்டைக்கப்பால் குருபதம் எனப்படும் சகஸ்ராரம் உள்ளது. இது ஆயிரம் இதழ்களை உடைய தாமரை. அதன் அமைவிடம் தலையில் பிரம்ம கபாலம் ஆகும். இது சிவசக்தியின் இணைவாகப் பார்க்கப்படுகிறது. சிவவாக்கியர் ஆறு ஆதாரங்களைக் கடந்து விளங்கும் ஏழாவது சக்கரமாகிய சகஸ்ராரத்தைக் குறிப்பிடுகிறார். சூரிய, சந்திர, அக்கினி என்ற மூன்று சுடரிலும், ஆறு ஆதாரங்களிலும் மூண்டெழுந்த தீயாகிய குண்டலினி, வச்சிர தேகமாகி வளர்ந்து நின்றது எவ்விடம். அது உடம்பின் தலை உச்சியின் மேல் ஆயிரம் இதழ்த் தாமரையான சகஸ்ராரம். இவ்வாறாக, மூலாதாரம் முதல் ஆக்நேயம் வரை ஆதாரங்கள் ஆறும் சகஸ்ராரத்தையும் சேர்த்துச் சக்கரங்கள் ஏழு எனப்படுகின்றன. இவை உடலில் உள்ள உறுப்புகள் அல்ல. அவை மூலாதாரத்தில் குண்டலினியானது எழும்பும்போது படிப்படியாக அடையக் கூடிய நிலைகள் ஆகும். இவை ஆன்ம சக்தி நிலையங்கள் எனப்படுகின்றது..

**முடிவுரை**

சித்தர்கள் தங்களுடைய தனிப்பட்ட வாழ்விற்கு என்று எதனையும் சிந்திக்கவில்லை. உலக மக்கள் அனைவரும் உய்யும் வழியை எடுத்துரைப்பதே அவர்கள் நோக்கம். பஞ்சபூதங்களால் உருவான நம் உடலில் அந்த பஞ்சபூதங்களின் சக்தியைக் கொண்டே மகா குண்டலினி சக்தியை எழுப்பி, மூலாதாரத்தில் சிறைபட்டுக் கிடக்கும் அந்தச் சக்தியைக் கபாலத்தில் உள்ள சகஸ்ராரத்தில் சேர்த்து அமிர்ததாரை பருகுவதன் மூலம் உலக மக்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வினைப் பெற சித்தர் பாடல்கள் வழிகாட்டியாக உள்ளன என்றால் மிகையில்லை.

**துணைநூற்பட்டியல்**

1. சித்தர் பாடல்கள், சி.எஸ்.முருகேசன், பாவை பப்ளிகேஷன்;ஸ்,சென்னை, மு.ப.2000

2. சித்தர் கண்ட மானுட ரகசியம், ரிஷபானந்தர், சங்கர் பதிப்பகம், சென்னை, மு.ப.2004

3. சித்தர் வழியில் வாழ்க்கைத் தததுவங்கள், திருமுருகஜி ஞானசித்தர் விஜயகுமார், மதி நிலையம், சென்னை, மு.ப.2006

4. சித்தர் இலக்கியங்களில் சமூகப்பார்வை, முனைவர்.ஆ.கருணாநிதி, பாவை பப்ளிகேஷன்;ஸ், சென்னை, மு.ப.2007

5. சித்தர் பாடல்கள், திருமுருகன்  சாகத்திய அகாதெமி புதுதில்லி, மு.ப.2012

6. சித்தர்களின் சாகாக்கலை, சி.எஸ்.முருகேசன், சங்கர் பதிப்பகம், சென்னை, மு.ப.2009

7. சித்தர் பாடல்கள் புரட்சி வித்தகர் சிவவாக்கியர், அடியன் மணிவாசகன்

8. சிவ வாக்கியர் அருளிய சிவவாக்கியம், பொதிகை பப்ளிஷர்ஸ்,கன்னியாகுமரி

9. சிவ வாக்கியர் பாடல்கள் - விளக்க உரையுடன், மா.ந.திருஞானசம்பந்தன், கங்கை புத்தகநிலையம்

10. சித்தம் தெளிவிக்கும் சித்தர் சிவவாக்கியம்,தமிழ்ப்ரியன், நர்மதா வெளியீடு